# கீழக்கரை நகர்மன்ற 28.06.2019–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் 2016–17 ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 & 2019–2020 கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (Fecal Sludge and Septage Management) பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த திட்டப்பணிகள் அனைத்தும் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக, இந்நகராட்சி உரக்கிடங்கிற்கு புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து உயர்மின் அழுத்த மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு புதிதாக 100KVA மின்மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. அதற்கு முதற்கட்டமாக LT- CT Box மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பொருத்தும் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலைவிகிதங்களின் நிலையான அட்டவணையில் (Standard Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாததால் இவ்வலுவலக பொறியாளர்களின் 30.05.2019–ந் தேதிய அறிக்கையின்படி, கீழ்காணும் விவரப்படியான மின்சாதனப் பொருட்களுக்கு 13.06.2019–ந் தேதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு, சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T.) குறிப்பிட்டு 28.06.2019–ந் தேதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | ஓம் டெக்ஸ் என்ஜினியரிங், மதுரை | சாயூஜ் என்டர்பிரைசஸ், திருநெல்வேலி |
| 1 | LT CT Box | 1 No | 40234 | 40445 |
| 2 | Cut Out Box | 1No | 21901 | 22220 |
| 3 | 25*6 Bus Bar | 1 Set | 9000 | 9300 |
| 4 | 500A Fuse Carrier | 1No | 3100 | 3325 |
| 5 | 400A L&T Main | 1 No | 15210 | 15500 |
| 6 | 400A L&T Link | 1No | 1593 | 1780 |
| 7 | 400A L&T Changeover | 1 No | 30886 | 31150 |
| 8 | Enclosure Box | 1No | 9457 | 9750 |
| 9 | VIF Meter Set | 1 Set | 8500 | 8850 |
| 10 | MRT Set | 1 Set | 27500 | 27850 |
| 11 | Arial Board | 1 No | 2389 | 2600 |
| 12 | 100 KVAR APFC Panel | 1No | 130000 | 132000 |
| 13 | APFC Panel Wiring | 1 Set | 9000 | 9600 |
| 14 | 185 Sqmm 3.5 Core Alu UG Cable | 1 M | 879 | 915 |
| 15 | 185 Sqmm Gland | 1 No | 900 | 920 |
| 16 | 185 & 95 Sqmm Lug | 1 set | 4800 | 5180 |
| 17 | 8 No Copper | 1 kg | 600 | 635 |
| 18 | 25*3 Copper Flat | 1 kg | 458 | 495 |
| 19 | Earthing Electrode Rod | 1 No | 11000 | 11350 |
| 20 | Labour and Transporting charges | | 15000 | 15500 |
| சரக்கு மற்றும் சேவை வரி தனி (G.S.T.) | | | | |

(கோப்பு எண்.409/2019/இ1)

அலுவலக குறிப்பு:-

இந்நகராட்சி உரக்கிடங்கில் 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கு முதற்கட்டமாக LT- CT Box மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பொருத்தும் பணி செய்வதற்கு வரிசை எண்.1 முதல் 20 வரையிலான மின்சாதனப் பொருட்கள், வேலைக்கூலி மற்றும் போக்குவரத்து கட்டணங்களுக்கு ஓம் டெக்ஸ் என்ஜினியரிங், மதுரை நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைவிகிதத்தின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.580 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :2**

**20 தூய்மை இந்தியா இயக்கம் (SBM)திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018–1 நாள்.11.12.2018–ன் படி நிர்வாக அனுமதி மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் செய்ய 22.01.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 18.02.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி இந்நகர்மன்றத்தில் அங்கீகாரம் பெறப்பட்டு 06.03.2019–ம் தேதி பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் இசைவாணை பெறுவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டியுள்ளது. அதற்குரிய கட்டணம் ரூ.43,600/– கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.**

| | | |
|---|---|---|
| **1)** | **1981–ம் ஆண்டு காற்று மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் 1981–ம் ஆண்டு மத்திய சட்டம் 14– பிரிவு 21ன்படி**<br>**அரசு ஆணை (Ms) No. 41, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்.09.04.2018** | **ரூ.21800/–** |
| **2)** | **1974–ம் ஆடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுபாடு சட்டத்தின் 1974–ம் ஆண்டு 6–வது மத்திய அரசு சட்டம் பிரிவு 25/26–ன் படி**<br>**அரசு ஆணை (Ms) No. 40, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்.09.04.2018** | **ரூ.21800/–** |
| | **மொத்தம்** | **ரூ.43600/–** |

**மேற்காணும் விவரப்படி அரசு ஆணை எண்.40 மற்றும் 41 நாள்.09.04.2018ன்படி மாசு கட்டுப்பாட்டு வாரிய இசைவாணை கட்டணம் ரூ.43,600/– மட்டும் District Environmental Engineer Tamil Nadu Pollution Control Board, Ramanathapuram என்ற தலைப்பில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு வஙகி கேட்பு வரைவோலை எடுத்து வழஙக அனுமதி வேண்டப்படுகிறது.**

**தீர்மானம் எண்.581அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

இந்நகராட்சி பொதுசுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் காம்பாக்டர் வாகனம் வண்டி எண் TN65 AE 7663 வாகனத்தில் உள்ள **கியர்பாக்ஸ் பழுது சரிசெய்தல், PTO பம்ப் புதிதாக மாற்றுதல் , கம்ப்ரஸர் பிளேடு செட் புதிதாக மாற்றுதல், கியர்பாக்ஸ் மற்றும் கம்ப்ரஸர் ஆயில் மாற்றுதல், மற்றும் புதிதாக 4 எண்ணம் டயர்கள் மாற்றி பழுதுகளை சரிசெய்யும்** பணிகள் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ 1,50,000/– க்கு இந்நகர் மன்றத்தில் 29/05/2019–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு **14.06.2019–ம்** தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | வி.எம்.எஸ்.மோட்டார் ஒர்க்ஸ்,<br>யாதவர் தெரு,<br>கண்ணன் கோவில் எதிரில், வெளிப்பட்டினம்,<br>இராமநாதபுரம் | ரூ.1,18,802/–<br>(CGST & SGST உட்பட) |
| 2 | மீனாட்சி சுந்தரம் ஆட்டோ மொபைல்ஸ்,<br>மீனாட்சி மரைன் ஸ்பேர்ஸ்,<br>177– ஏ வடக்கு வெளிவீதி<br>மதுரை | ரூ.1,24,254/–<br>(CGST & SGST உட்பட) |
| 3 | பிரபா ஏஜென்ஸிஸ்,<br>முனியசாமி நாயுடு காம்பவுண்ட்<br>பொன்னகரம் பிராட்வே, மதுரை | ரூ.1,25,198/–<br>(CGST & SGST உட்பட) |

**(கோப்பு எண்.469/2019/எச்1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

இந்நகராட்சி பொதுசுகாதார காம்பாக்டர் வாகனம் TN65 AE 7663-யை பழுது நீக்கம் செய்து தருவதற்கு பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட ரூ 1,18,802/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வி.எம்.எஸ்.மோட்டார் ஒர்க்ஸ், இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.582 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :4</u>**

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து பகுதிகளிலும் தனியார் மூலம் குப்பை சேகரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்.6819/2017/பி3 நாள்.14.03.2018–ன்படி தனியார் மூலம் பணிகள் பார்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்.1528/2017எச்1, நாள்.03.08.2018–ன்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2018 முதல் 02.08.2019 வரை ஓராண்டிற்கு பணி உத்திரவு வழுஙகப்பட்டு தற்போது வரை பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திடமிருந்து தொடர்ந்து பணி மேற்கொள்ள விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி பொதுசுகாதார நலன் கருதி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு தொடர்ந்து 03.08.2019 முதல் 02.08.2020 வரை ஓராண்டிற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்திரவு வழஙக இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் குறிப்பு வழஙகப்பட்டுள்ளது. துப்புரவு ஆய்வாளரால் வழஙகப்பட்ட குறிப்புரையின்படி மேற்படி நிறுவனத்திற்கு ஓராண்டிற்கு பணிநீடிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1528/2017/எச்1)

அலுவலக குறிப்பு

1. பொதுசுகாதாரப் பணி அவசர அவசியம் கருதி தனியார் மூலம் குப்பை சேகரிக்கவும் அதற்கான செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. துப்புரவு ஆய்வாளர் குறிப்புரையின்படி மதுரை எக்ஸெர்நெட் நிறுவனத்திற்கு 03.08.2019 முதல் 02.08.2020 வரை ஓராண்டிற்கு பணிநீடிப்பு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.583அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் புதிதாக டிரான்ஸ்பார்மர் அமைத்து மும்முனை (3 Phase) மின் இணைப்பு பெறுவதற்குரிய மின்சாதன பொருட்கள் பொருத்துவதற்கு, பழுதான காவலர் அறையை மராமத்து பணிகள் செய்து கொடுப்பதற்குரிய உத்தேச செலவினம் ரூ.45,000/–க்கு இந்நகர் மன்றத்தில் 29.05.2019–ம் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி பழுதான காவலர் அறையை மராமத்து பணிக்கு பொருள்கிரையம் மற்றும் வேலைக்கூலி உட்பட பணி செய்து கொடுப்பதற்கு 18.06.2019–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ. எண் | நிறுவனம்/ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எஸ். முனியசாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>1/5, மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம். | ரூ. 43,500/– |
| 2 | திரு. ஆர்.உத்தண்டி,<br>ஒப்பந்ததாரர்,<br>1/556–ஏ, நேரு நகர்,<br>இராமநாதபுரம். | ரூ. 44,700/– |
| 3 | திரு. சி.பழனி,<br>ஒப்பந்ததாரர்,<br>2/70–7, முனீஸ்வரம் நகர்,<br>கீழக்கரை. | ரூ. 45,200/– |

**(கோப்பு எண். 837/2018/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.43,500/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ். முனியசாமி இராமநாதபுரம் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.584அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பெத்திரி தெருவில் (21 குச்சில்) அமைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்பாட்டில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் தண்ணீர் பயன்பாட்டிற்குரிய கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 0.5HP மின்மோட்டார்கள் உதிரி பாகங்கள் துருபிடித்து மின்மோட்டார்களை இயக்க முடியாமல் மோசமான நிலையில் உள்ளதால், மேற்கண்ட 2 எண்ணம் மின்மோட்டார்கள் மாற்றி புதிதாக இரண்டு எண்ணம் 0.5HP மின்மோட்டார்கள் பொருத்தும் பணிகள் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ.25,000/–க்கு இந்நகர்மன்றத்தில் 29.05.2019–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இரண்டு எண்ணம் 0.5HP மின்மோட்டார்கள் வாங்கி பொருத்தும் பணிகள் செய்வதற்கு 18.06.2019–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எம். ராஜா ரீவைண்டிங<br>420– மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.24,120/– |
| 2 | ஸ்ரீலிஙகம் எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>E5 ஆலிம் புலவர் காம்ப்ளக்ஸ்<br>(பீசா பேக்கரி பின்புறம்)<br>கீழக்கரை | ரூ.24,470/– |
| 3 | உமா ரீவைண்டிங ஒர்க்ஸ்<br>முஸ்லிம் பஜார்<br>கீழக்கரை | ரூ.24,600/– |

**<u>கோப்பு எண். 290/2019/இ1</u>**
<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ 24,120/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **எஸ்.எம். ராஜா ரீவைண்டிங, கீழக்கரை** விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.585அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :7</u>**

**கீழக்கரை நகராட்சி TN65 S4101 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு ஆயில் சர்வீஸ், 5 டோர் செக்கப், A.C. சர்வீஸ், 4 வீல் பேரிங் செக்கப், வீல் அலாய்மென்ட், ரேடியேட்டர் கிளீனிங், வாட்டர் சர்வீஸ், சென்சார் செக்கப் போன்றவற்றை பழுதுநீக்கம் செய்து தருமாறு இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநரால் அனுமதி கோரப்பட்டுள்ளது.**

அதன்படி மேற்காணும் ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள்மேற்கொள்ள பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது நகர் மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 519/2019/ இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.586 அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :8</u>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 புதுக்குடி கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள **5HP** குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின் பம்ப் **(5HP Oil Engine Pump)** இயங்காததால், அதனை பழுது நீக்கம் செய்வதற்குரிய உத்தேச செலவினம் ரூ.22,000/—ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 29.05.2019—ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 5HP குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின் பம்ப் பழுது நீக்கம் செய்வதற்கு 17.06.2019—ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எம். ராஜா ரீவைண்டிங்<br>420-D மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.19,700/— |
| 2 | வெங்கடேஷ் எலக்ட்ரிக்கல்ஸ் & ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>முஸ்லிம் பஜார்<br>கீழக்கரை | ரூ.20,100/— |
| 3 | ஸ்ரீலிங்கம் எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>E5 ஆலிம் புலவர் காம்ப்ளக்ஸ்<br>(பீசா பேக்கரி பின்புறம்)<br>கீழக்கரை | ரூ.20,300/— |

<u>கோப்பு எண்.429/2019/இ1)</u>

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.19,700/—க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம். ராஜா ரீவைண்டிங், கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>தீர்மானம் எண்.587 அனுமதிக்கப்பட்டது.</u>

பொருள் :9

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 தட்டாந்தோப்பு தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் இயங்காததால், பழுது நீக்கம் செய்யும் பணி செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.45,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 29.05.2019–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 10HP குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்ப் பழுது நீக்கம் செய்வதற்கு 17.06.2019–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண். | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | எஸ்.எம். ராஜா ரீவைண்டிங்<br>420-D மெயின்ரோடு,<br>கீழக்கரை | ரூ.39,200/– |
| 2 | ஸ்ரீலிங்கம் எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>E5 ஆலிம் புலவர் காம்ப்ளக்ஸ்<br>(பீசா பேக்கரி பின்புறம்)<br>கீழக்கரை | ரூ.40,500/– |
| 3 | ஸ்ரீ சபரிவாசா ரீவைண்டிங் ஒர்க்ஸ்<br>R.A. காம்ப்ளக்ஸ்,<br>கீழக்கரை | ரூ.41,700/– |

கோப்பு எண். 461/2019/இ1)

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.39,200/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம். ராஜா ரீவைண்டிங், கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.588அனுமதிக்கப்பட்டது.**

ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.